REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 18உ வெள்ளி (31—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 19உ சனி (1—6—57) [இதழ் 302

மத்திய அரசாங்க ஊழியர் எண்ணிக்கை

புதுடில்லி, மே 31—

1955 ஜூன் 30-ம் நாள்வரை மொத்தம் 16,19,152 பேர் மத்திய அரசாங்க நிர்வாகத்தில் பணியாற்றினர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களில் 13,75,056 பேர் மாதம் ரூ. 101-க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெற்றவர்களாம்! 2,403 பேர் மட்டுமே மாதம் ரூ. 1000-க்கு மேல் அடிப்படைச் சம்பளம் பெற்றுள்ளவர்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மத்திய உள்நாட்டு அமைச்சர்தத்தார் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

ஓரளவுக்குத்தான் கருங்கல்லும் பாரம் தாங்கும்!

பளு அதிகமானால் என்றைக்கேனும் ஒருநாள் பிளந்தே போகும்!

106 வரிகளை ஏழைகள்மீது சுமத்துவதா?

பணக்காரர்களைப் பாதிப்பது ஆறு வரிகள்தானே!

ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றவா 111 வரிகள்?

புள்ளி விவரங்கள் காட்டி போர்க் குரலெழுப்புகிறார் பொதுச்செயலாளர்

"இந்தியப் பேரரசின் புது வரிகள் மக்களைப் பாழ்படுத்தக் கூடியனவாக—இழிநிலைக்குக் கொண்டு செல்லக்கூடியனவாக இருக்கின்றன.

"கருங்கல்கூட, அதன்மீது ஓரளவுக்கு பாரம் ஏற்றினால்தான் தாங்கிக்கொண்டே இருக்கும்; பாரம் ஏறிக்கொண்டே இருக்குமானால் சொல்லாமல் கொள்ளாமல் என்றைக்கேனும் ஒருநாள் அது பிளந்தே போகும். இரும்பு வளைந்து கொடுக்கும்—கருங்கல் வளைந்து கொடுக்காது என்பதை எவராயினும் சரி—நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்"

—இவ்வாறு, 29-5-57-ல், சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகங்கள்— இணை அமைப்புகள் சார்பில் நடைபெற்ற புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் போர்க் குரலெழுப்பி, புது வரிகளைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :—

வாட்டும் காய்ச்சல்— தாக்கும் வரிகள்!

"இப்பொழுது 'இன்புளுயன்சா' காய்ச்சலும் வந்திருக்கிறது; நிதியமைச்சரின் புதிய வரிகளும் வந்திருக்கின்றன. அந்த நோய் மக்களை எந்த அளவுக்கு வாட்டிவதைக்கின்றதோ அந்த அளவுக்குப் புது வரிகளும் மக்களுக்குக் கொடுமை தரக்கூடியனவாக அமைந்திருக்கின்றன. புது வரிகள் எந்த அளவுக்கு மக்களைப் பாதிக்கின்றன என்பதையும், எந்த அளவுக்குத் தொல்லை தரக்கூடியனவாக இருக்கின்றன என்பதையும், தாங்கமுடியாத நிலைகளை மக்கள் தாங்கவேண்டிய நெருக்கடியான நிலையில் நிற்கின்றார்கள் என்பதையும் உணருகின்றோம்.

உண்மை உணர்ந்தோர் உணர்த்துகின்றனர்!

"இப்பொழுது போட்டிருக்கின்ற வரிகளைத் 'தாங்கமுடியாது' என்று எல்லா தரப்பினரும், நாட்டில் உள்ள எல்லா நல்லவர்களும், ஆட்சிபீடத்திலிருந்து அனுபவம் பெற்றவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் கூறுகிறார்கள்; பொருளாதார நிபுணர்களெல்லாம் — மக்களின் வாழ்க்கை நிலையை அறிந்த அரசியல் அறிஞர்களெல்லாம் எடுத்துக் கூறுகிறார்கள்; பொருளாதாரத்தை உணர்ந்து, எதிர்காலம் எப்படியிருக்கவேண்டும்—நிகழ்காலம் எப்படியிருக்கிறது—இறந்த காலம் எப்படியிருந்தது என்பதை கண்டறிந்தவர்களெல்லாம் கூறுகிறார்கள்.

தவறான திட்டத்திற்குத் தவறான முறைகளா!

"ஆனால் ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள், ஏதோ முன்பு போட்ட தவறான திட்டங்களுக்காக—தவறான முறையில் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தில் வந்து நின்று, தவறான பல வரிகளைப் போட்டு—தவறாக மேலும் நடக்கவேண்டிய நிலையை நீட்டிக்கொண்டு போக வேண்டிய நெருக்கடியில் இருக்கிறார்கள்.

அவர்கள் கூறுவதை நாம் உணருகிறோம்!

"இந்திய ஆட்சிபீடத்தில் இருந்த முன்னாள் அமைச்சர் இராசகுமாரி அமிர்தகவுரி கண்டித்திருக்கிறார்; இன்றைக்கும் காங்கிரசிலிருப்பவரும் — பெருந்தலைவர் என்று அவர்களாலேயே போற்றப்படுபவரும் — முன்னாள் கவர்னர் - ஜெனரலும் - முன்னாள் முதலமைச்சருமான சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் இவ்வரிகளை கண்டித்திருக்கிறார்; 'இதனால் காங்கிரசிற்கு ஆபத்து' என்று கூறியிருக்கிறார்; 'நெருப்போடு விளையாடாதீர்' என்று இந்திய நிதியமைச்சருக்கு அவர்களின் நண்பர்கள் மூலம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். ஆகவே, இந்த வரிக் கொடுமைகளை நாம் அனைவரும் உணருகிறோம்.

"இன்றைய சூழ்நிலையில் இந்த வரிகள் மக்களைப் பாதிக்கக்கூடியனவாகவும், ஏழை-எளிய - பாட்டாளி - தொழிலாளி - நடுத்தர வகுப்பு மக்களை பாதிக்கக்கூடியனவாகவும் அமைந்திருக்கின்றன என்பதையும், மக்களின் வாழ்வை வளமிக்கதாக ஆக்க அல்ல என்பதையும் பல பொருளாதார நிபுணர்கள் நல்ல முறையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அரசியல் அறிஞர்கள் அறிவுறுத்தி வந்திருக்கிறார்கள்.

இது என்ன பேதமை?

"இப்பொழுது இந்திய நிதியமைச்சர் 112 வரிகள் புது வரிகளாகக் கொண்டு வந்திருக்கிறார். அவைகளில் 106 வரிகள் ஏழை-எளிய-பாட்டாளி-நடுத்தர மக்களை நேரடியாகப் பாதிக்கக் கூடியனவாகும். ஆறே ஆறு வரிகள்தான் பணக்காரர்களை-முதலாளிகளை - மிட்டாதாரர்களை-மிராசுதாரர்களை ஜமீன்தாரர்களை -படாடோபக்காரர்களை பாதிக்கக் கூடியனவாக அமைந்திருக்கின்றன. அந்த 6 வரிகளிலும் ஒரு வரி அடுத்த ஆண்டில்தான் அமுலுக்கு வருமாம்!

எதற்காக?

"இப்பொழுது அமுலுக்கு வருவதற்காக இந்திய நிதி அமைச்சரால் விளக்கப்பட்ட வரிகள் 111! இந்த 111 வரிகள்மூலம் அவர் எதிர்பார்க்கக் கூடியது ரூ. 93 கோடி! இந்த 93 கோடி ரூபாயும் எதற்காக என்றால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக!

தேர்தல் காலத்தில் நீட்டாமலா இருந்தனர்?

தேர்தலுக்குமுன்னால், நாங்கள் ஆட்சிபீடத்திற்கு வந்தால் இத்தனை வரிகளையும் போடுவோம்; என்று கூறினார்களா என்றால் கூறவில்லை! உள்ளத்தில் கொண்டிருந்தார்களா என்றால், கொண்டிருந்தார்கள்! இவ்வளவு வரிகள் போட்டால்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த ஆண்டு நிறைவேறும் என்ற கொள்கை உண்மையை-அதற்கான திட்டங்களை - அடிப்படைகளை சனவரித் திங்களில் நீட்டாமலா இருந்திருப்பார்கள் என்றால் அது ஒருபக்கம் நீட்டிக்கொண்டுதானிருந்தார்கள்!

"ஆனால் தேர்தல் நேரத்தில் என்ன சொன்னார்கள் என்றால், 'ஐந்தாண்டுத் திட்டத்தை காங்கிரசாட்சி-இந்தியத் துணைக்கண்ட ஆட்சி நிறைவேற்றிவிடும்; மக்கள்மீது வரிபோட வேண்டி வந்தாலும், ஏழை-எளிய-பாட்டாளி-நடுத்தர மக்கள்மீது இந்த 'காருண்ய'மிகுந்த காங்கிரஸ் வரி போடாது; தாங்கக் கூடியவர்கள் மீதுதான் போட்டாலும் போடுமே தவிர, ஏழை-எளிய பாட்டாளி மக்களை வாட்டக் கூடிய முறையில் வரிகளை போடாது;' என்ற முறையில் கூறினார்கள்.

நித்தலாட்டந்தானே!

"அதற்கு எடுத்துக்காட்டாக இடைக்கால 'பட்ஜெட்'கொண்டு வந்தார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். அதில் ஒரு புதுவரியையும் காட்டாமல், வரவையும்-செலவையும் சரிகட்டி நம்மிடம் நீட்டினார்; மக்களும் பார்த்தார்கள்; 'வரிகள்' எதும் இல்லை: வரவுக்கும்-செலவுக்கும் நேர்கட்டும் வகையில் 'இந்திய' அரசாங்கம் செய்கிறது; என்று மெச்சிக்கொண்டார்கள்; ஓட்டுக்களையும் கொடுத்து, 'போகட்டும்' என்று அனுப்பினார்கள்.

யார் எதிர்த்தாலும் அவருக்கு அலட்சியமா?

"தேர்தல் காலத்தில் அவர்கள் சொல்லி 3 மாதம் ஆவதற்குள்ளாகவே, 112 வரிகளை, 'போட்டுத்தான் தீருவேன்; வேறு வழியில்லை' என்றும், 'யார் தடுத்தாலும் — தடுக்காவிட்டாலும் போடுவேன்; யார் எதிர்த்தாலும் — எதிர்க்க விட்டாலும் போடுவேன்; யார் கண்டித்தாலும்—கண்டிக்காவிட்டாலும் போடுவேன்,' என்று ஆணவமொழி பேசுகிறார் 'இந்திய' ஆட்சியாளரின் நிதியமைச்சர்.

அன்றைக்குக் காறேமே இந்த ஆணவமொழி!

"இந்த ஆணவமொழிகளை அவர்கள் தேர்தல் காலங்களிலே பேசியிருப்பார்களேயானால், உள்ளபடியே இவர்கள் நாட்டில் நல்லதொரு ஜனநாயகத்தை விரும்புகிறார்கள் என்று பொருள். மக்களுடைய அன்பையும் ஆதரவையும், பற்றையும்—பாசத்தையும் என்றென்றைக்கும் ஆட்சியின் பக்கம்வைக்க முன்கூட்டியே திட்டம் போடுகிறார்கள் என்று பொருள்!

தாங்க இயலாதவர்கள் மீதா இதைச் சுமத்துவது?

"ஆனால் இவர்கள், 'தாங்கக் கூடியவர்கள் மீதுதான் வரி போடுவோம்,' என்று சொல்லிவிட்டு, தாங்கக்கூடாதவர்கள் மீது இப்பொழுது வரிகளைப் போட்டிருக்கிறார்கள்.

"இந்த வரிகளில் கிட்டதட்ட 25 சதவிகிதம்தான் பணக்காரர்கள்மீது விழுகின்ற வரியே தவிர, 75 - சதவிகிதம் ஏழை - எளிய - பாட்டாளிகளின் தலையில் விழுகின்ற வரிகள்தான்.

இலிக்க இலிக்கக் கூறியதெல்லாம் எங்கே?

"இவர்கள், ஒரு காலத்தில் — வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் அவன் பல்வேறு வரிகள் விதித்தக் காலத்தில் கூறினார்கள்—'வெள்ளைக்காரன் கொடுமையாளன் - அன்னியன் - கொடுரம் புரிகின்றவன்; இந்த நாட்டைச் சுரண்டிச் சென்று தன்னுடைய நாட்டுக்கு வளத்தை ஏற்படுத்துகிறவன்; அந்த அளவுக்கு இந்தக் கொடுமைக்காரன் வரிச் சுமையை ஏற்றுகிறான்; மக்கள் வரிக் கொடுமையைத் தாங்கமாட்டார்கள்; நாங்களெல்லாம் ஏழை பங்காளர்கள்! நாங்கள் ஆட்சி பீடம் ஏறுவோமேயானால் நாட்டில் நல்லாட்சி நிலவும்! சுயராச்சியம் ஏற்படுமேயானால் மக்களின் துக்கங்களெல்லாம் போகும்! சுகம் பிறக்கும்—மக்களின் நலிவு போகும்! வரிச் சுமை அகலும் — நல்ல பல நிலைமைகள் ஏற்படும்! இலஞ்ச ஊழல்கள் போகும் — மோசடி குறையும்—தொல்லைகளெல்லாம் அகலும்!' என்று, காலஞ் சென்ற சத்தியமூர்த்தி அய்யரிலிருந்து சாதாரண காங்கிரஸ்காரர்வரை கூறினார்கள்; இனிக்க இனிக்கக் கூறினார்கள். 'பாலாறும் தேனாறும் கலந்தே ஓடும்; சுபீட்ச நிலை ஏற்படும்' என்று கூறினார்கள்.

வெறியர் விதித்த எந்த வரியை நீக்கினார்கள்?

"நான் கேட்கிறேன்—இவர்கள் ஆட்சி பீடமேறியப் பிறகு, வெள்ளைக்காரன்—வெறியன்—அவன் விதித்த எந்த வரியை இவர்கள் நீக்கினார்கள்? அவன் அன்னியன் —வெறியன் — கொடுமைக்காரன்; அவன் விதித்த எந்த ஒரு வரியை இவர்கள் ஆட்சி பீடமேறிய இந்த 10 ஆண்டு காலத்தில் நீக்கினார்கள்? காட்ட முடியுமா?

நல்லது இல்லையானாலும் கெடுதலாவது செய்யாதே?

"இவர்கள் குறைக்கவும் வேண்டாம்—நீக்கவும் வேண்டாம்; 'நல்லது செய்தல் ஆற்றிராயினும் —அல்லது செய்தல் ஓம்புமின்' என்றான் 'புறநானூற்று' ஆசிரியன் ஒருவன்! 'நல்லது செய்யாவிட்டாலும் கெடுதலாவது செய்யாமலிரு' என்பதைப் போல, வெள்ளைக்காரன் செய்த நல்லது செய்யாவிட்டாலும், அந்த வெறியின் செய்துவைத்த நிலைமைகளை யாவது அப்படியே விட்டுவைக்கலாமல்லவா? அதுவுமில்லை. புதுப் புது வரிகள் இல்லாத வரிகளெல்லாம் நுழைந்திருக்கின்றன; இருந்த வரிகளெல்லாம் ஏறியிருக்கின்றன இந்தக் 'காருண்ய' மிகுந்தவர்கள் ஆட்சியில்!

கைவரிசையைக் காட்டி விட்டார்கள்!

"வெள்ளைக்கார வெறியன் இந்த நாட்டைவிட்டுச் செல்லும் போது அஞ்சலட்டையின் விலை ½ அணா; இந்தக் 'காருண்ய' மிகுந்த காங்கிரசார் ஆட்சி பீடமேறியப் பிறகு முக்காலணா! அதற்குப் பிறகு, 'புதிய காசுகள்' வந்த பிறகு அது தன் கைவரிசையைக்காட்டி 5 புதிய காசுகளாக உயர்ந்துவிட்டது! அதற்குப் பிறகு, நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அந்தப் பதவியேற்றப் பிறகு 5 காசுகளை

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 31—5—57 வெள்ளி

மாக்னசைட் சோகக் கதை--(2)

1898-ம் ஆண்டிலிருந்து சேலம் மாக்னசைட் தாதுப் பொருளை வெட்டி எடுத்துப் பொருளிட்டி வரும் பிரிட்டிஷ் நிறுவனத்தின் பெயர் மாக்னசைட் சிண்டிகேட் (லிமிடெட்) என்பதாகும். அன்றிருந்த ஆங்கில துரைத்தனம் சேலம் மாக்னசைட்டை வெட்டி எடுத்து விற்றுப் பணந் திரட்ட மேற்படி பிரிட்டிஷ் நிறுவனமான மாக்னசைட் சிண்டிகேட்டுக்கு அறுபதாண்டுக் கால குத்தகை அளித்திருந்தது. அக் குத்தகை 1958-ம் ஆண்டு முடிவுடன் முற்றுப் பெறுகின்றது.

ஏற்கனவே தாம் குத்தகைப் பெற்றிருந்த நிலப் பரப்பு மீண்டும் தமக்குக் குத்தகையாகக் கிடைப்பது அருபொருள் என எண்ணியோ என்னவோ, தனது சொத்து முழுதையும் நல்ல விலைக்கு, கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கு, பிரிட்டிஷ் நிறுவனமான மாக்னசைட் சிண்டிகேட் விற்றுவிட்டது. அந்த கல்கத்தா நிறுவனம் சொந்தத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலை நடத்தி வருவதாகவும், அதற்காக வேண்டிய மாக்னசைட்டை, பிரிட்டிஷ் நிறுவனமான மாக்னசைட் சிண்டிகேட்டிடம் இன்றுவரை வாங்கி வருவதாகவும் தெரிய வருகிறது.

கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி, இன்றுவரை மாக்னசைட் சிண்டிகேட் செய்து வரும், சேலம் மாக்னசைட்டை வெட்டி எடுத்துப் பணம் திரட்டும் திருப்பணியை, தாமே சொந்தத்தில் மேற்கொள்ள விரும்புகிறது. அவ்விருப்பத்தைச் செயலாற்ற இரண்டு கோடி ரூபாய் மூலதனம் இடவும் தாம் தயாராக இருப்பதாக, அது அறிவித்திருக்கிறது.

இரும்பை உருக்குவதற்குத் தேவைப்படும் உட்புற கொப்பரையை, பெருந் தீயிக்கும் உருகாத் தன்மைகொண்ட மாக்னசைட் தாதுப் பொருளிலிருந்து தான் செய்ய முடியும் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம். வேறு ஒரு நிறுவனம் வெட்டியெடுக்கும் மாக்னசைட்டை, அந்த நிறுவனம் குறிப்பிடும் விலை கொடுத்து வாங்கி, அதைத் தொழில்படுத்தினால் கிடைக்கக் கூடிய இலாபத்தைவிட, மாக்னசைட்டையும் தனது சொந்தப் பொறுப்பில் வெட்டி எடுத்துத் தொழில்படுத்துவதினால் கூடுதலான இலாபம் கிடைக்குமே என்ற நினைப்பில், மாக்னசைட்டை வெட்டி எடுக்கும் உரிமையும் தனக்கே இருக்க வேண்டும் என, கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி முடிவு கட்டிக்கொண்டது. எனவே, தனது தொழிலில் இலாபம் கிடைக்கக்கூடியவகையில், மாக்னசைட் குறைந்த விலைக்குக் கிடைக்க வழி இருந்தால் அல்லாது, தன்னால் இரு கோடி ரூபாய் மூலதனமிட்டு புதுத் தொழிலைத் துவங்க இயலாது என்று, மேற்படி கல்கத்தா நிறுவனம் பேசத் தொடங்கியது.

மேற்குறிப்பிட்டுள்ள காரணத்தை, இந்தியப் பேரரசிடம் கூறி, சேலம் மாக்னசைட்டை வெட்டியெடுப்பதற்கான உரிமையைத் தனக்குப் பெற்றுத் தரும்படி கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி வேண்டிக் கொண்டது. அதன் வேண்டுகோளுக்கு இணங்கி, இன்றுவரை பிரிட்டிஷ் நிறுவனமான மாக்னசைட் சிண்டிகேட் அனுபவித்து வரும் மாக்னசைட் படிந்துள்ள அதே நிலப் பரப்பை, கல்கத்தா நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விட வேண்டும் என, சென்னை அரசாங்கத்தை இந்தியப் பேரரசு கோரியுள்ளது. தேசிய நலனைக் கருதி, மேற்படி தனது கோரிக்கைக்கு இணங்கவேண்டும் என்றும் இந்தியப் பேரரசு நியாயம் காட்டியுள்ளது.

தேசிய நலன் என்ற நியாயத்தை முன்வைத்து, சேலத்தில் மாக்னசைட் வெட்டி எடுக்கும் உரிமையை கல்கத்தா நிறுவனத்துக்குத்தான் தர வேண்டும் என சென்னை அரசாங்கத்தைக் கிட்டிப் போடுவதுடன் இருந்துவிடாது, தனது வாதத்திற்குச்சாதகமான வேறு மூன்று நியாயங்களையும், இந்தியப் பேரரசு சென்னை அரசாங்கத்திற்கு உணர்த்தி இருக்கிறது. அதாவது, மாக்னசைட்டை வெட்டி எடுத்துத் தொழில்படுத்து வதற்குத் தேவையான இரண்டு கோடி ரூபாய் மூலதனமிட சென்னை அரசாங்கத்தால் இயலாது என்பது ஒன்று; அம் மூலதனம் இடக்கூடிய பணபலமுடையவர்கள் தென்னிந்தியாவில் இல்லை என்பது மற்றொன்று; மேற்படி தொழிலின் வெற்றிக்கு இன்றியமையாத் தேவையாக உள்ள தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் கிடையவே கிடையாது என்பது இன்னொன்று. இம் மூன்று நியாயங்களையும் எடுத்துக்காட்டி, தேச நலனையும் சுட்டிக்காட்டி, சேலம் மாக்னசைட்டை வெட்டி எடுக்கும் உரிமையை, கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கே வழங்க உடன்பட வேண்டும் என, சென்னை அரசாங்கத்தைக் கிட்டிப் போடுகிறது டில்லி ஆதிபத்தியம்!

இது விவகாரத்தில் சென்னை அரசாங்கத்தின் முடிவு என்ன என்பது இன்னமும் தெளிவாகவில்லை. இன்னமும் அமைச்சரவையில் ஆலோசனையில் இருந்து வருகின்றது போலும்!

பல கோடி ரூபாய்

நஷ்ட ஈடு தர நேரிடுகிறதாம்!

சேதங்களைத்தடுப்பதற்கு பாதுகாப்புப் படை

போக்குவரத்து மூலம் காணமற்போகும் சரக்குகளுக்கு நஷ்ட ஈடாக ஆண்டுதோறும்இரயில்வே இலாகா பல கோடி ரூபாய் தரவேண்டியுள்ளதாம்!

இதனால் இரயில்வே சொத்துக்களுக்கும் நஷ்டம் ஏற்படுகிறதாம் எனவே, இவைகளைத் தடுப்பதற்காக இரயில்வே பாதுகாப்புப் படை ஒன்றை அமைப்பதற்கான மசோதா ஒன்று சில திருத்தங்களுடன் மாநிலங்கள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கீரியாறு அணைத் திட்டம்

லாபகரமானதல்ல என்று முன்பு கைவிடப்பட்டதாம்

மீண்டும் பரிசீலனை செய்ய அமைச்சர் உத்தரவு?

சென்னை, மே 29—

கீரியாறு அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றினால் நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக வறண்ட சங்கரன் கோவில் தாலுகாவிற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்றும், சுமார் 15,000 ஏக்கர் நிலம் அதிகப்படியாக சாகுபடியாகும் என்றும் சென்னை மராமத்து அமைச்சருக்கு சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

முன்பு சென்னை அரசாங்கம் இதுபற்றி பரிசீலனை செய்கையில் 'இது இலாபகரமானதாக இருக்காது என்று நிபுணர்கள் கருத்தறிவித்ததை யொட்டிக் கைவிட்டு விட்டது.

இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சென்னை மராமத்து அமைச்சர் பிரதம நீர்ப்பாசன எஞ்சினீயரைக் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

முன்னர், இத்திட்டத்திற்கு ரூ. 2 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருந்தது; ஆனால் இப்போது ரூ. 1½ - கோடி செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றலாமென கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மாதம் ரூ. 30 இடைக்கால

நிவாரணம் வேண்டும்

ஆந்திர என். ஜி. ஓ-க்கள் கோரிக்கை

ஐதராபாத், மே 30—

வெளியிடங்களிலிருந்து ஐதராபாத் மாற்றப்பட்ட என். ஜி. ஓ-வினருக்கு மாதம் ரூ. 30 இடைக்கால நிவாரணம் அளிக்க வேண்டும் என்று ஆந்திர மாநில என். ஜி. ஓ-க்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனால் ஆண்டுக்கு ரூ. 15 இலட்சம் அரசாங்கத்திற்கு அதிகச் செலவாகுமாம்.

அங்கேரியில் அந்நியர் படை!

காரணம் பற்றி விளக்கம்

புடாபெஸ்ட், மே 29—

அங்கேரியில் தற்போது சோவியத் ரஷ்யாவின் இராணுவம் இருந்து வருவதும், சமீபத்தில் நடைபெற்ற மக்கள் எழுச்சியை ஒடுக்க இந்தப் படை பயன்படுத்தப்பட்டதும் தெரிந்த ஒன்றாகும்.

எதிர்காலத்தில் சட்டபூர்வமான அந்தஸ்தை இந்த ரஷ்யப் படைகள் பெறுவதற்காக இரு நாடுகளுக்கு இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

அங்கேரி மக்கள், கிளர்ச்சியின் போதும் அதற்குப் பின்னரும் தொடர்ந்து, அந்நியத் துருப்புக்கள் அங்கேரியில் இருப்பதைக் கண்டித்து வருகின்றனர். ஆனால், உலகத்தில் தற்போது நிலவி வரும் போர்ப் பீதியை முன்னிட்டு இந்த உடன்பாடு செய்ய வேண்டியுள்ளது என்று அங்கேரி காரணம் காட்டி, அந்நியப் படைகளுக்கு இடமளிக்க முற்பட்டுள்ளது.

சுதந்திர வீரர்களுக்கு நினைவுச் சின்னம்

புதுடில்லி, மே 29—

1857-ம் ஆண்டிலிருந்து 1947ம் ஆண்டுவரை நடைபெற்ற இந்திய சுதந்திரப் போராட்டங்களில் உயிர் நீத்த உத்தமர்களுக்கு இந்தியத் தலைநகரான டில்லியில் ஓர் நினைவுச் சின்னம் கட்ட நிறுவ அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மணவாசியில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைக்கப்படுகிறதாம்!

மத்திய சர்க்கார் கடன் வழங்க முன்வருகிறதாம்!

உழைப்பின் பலன் முழுவதும் உற்பத்தியாளருக்குக் கிடைக்கச் செய்வதே திட்டத்தின் நோக்கமாம்!

புதுடில்லி, மே 29—

சென்னை மாநிலத்தில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மணவாசியில், கைத்தறி நெசவாளர்களுக்கான தொழில்துறைக் கூட்டுறவுச் சங்கமொன்று, மத்திய சர்க்கார் உதவியுடன் இப்பொழுது அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் மொத்தம் 77 உறுப்பினர்களிருப்பார்கள். இவர்களில் 60 பேர் ஆண்கள்; அவர்கள் ஒவ்வொருவரும் ரூ.50 மூலதனப் பங்குள்ளவர்களாக இருப்பார்கள். பாக்கியுள்ளவர்கள் பெண்கள்; அவர்கள் உறுப்பினர் கட்டணமாக பெயரளவுக்கு ஒவ்வொருவரும் ரூ. 1 மட்டிலும் செலுத்துவார்கள்; நூல் சுற்றி கண்டை தயாரிக்கும் வேலைகளை அவர்கள் கவனித்து வருவார்கள்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய சர்க்கார் சென்னை மாநில சர்க்காருக்கு வட்டியில்லாக் கடனாக ரூ. 13,800ம்;மானியமாக ரூ. 4,100ம் அனுமதித்துள்ளனர்.

இக்கூட்டுறவுச் சங்கம், அதன் நடைமுதல் மூலதனச் செலவுகளுக்காக, ரூ. 20,000 ரிசர்வ் பாங்கியிடமிருந்து கடனாகப் பெறும்.

மத்திய சர்க்கார் உதவியுடன் அமைக்கப்பட்டுவரும் கைத்தறித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் இது ஏழாவதாகுமாம்! உற்பத்தியாளர்களுக்கு அவர்களுடைய உழைப்பின் பலன் முழு அளவில் கிடைக்கும்படி செய்வதே தொழில்துறைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுவருவதன் முக்கிய நோக்கமாகுமாம்.

அரியலூர் விபத்து எதிரொலி

262 மனுக்களுக்கு ரூ. 7½ இலட்சம் நஷ்டஈடு

சென்னை, மே 29—

அரியலூர் இரயில் விபத்து சம்பந்தமாக 262 மனுக்கள் விசாரிக்கப்பட்டு ரூ. 7½ இலட்சம் நஷ்டஈடு தரவேண்டும் என்று மனுக்களை விசாரித்த ஆணையாளர் இராகவ முதலியார் உத்தரவிட்டுள்ளாராம்.

இன்னும் ஒரே மனு மட்டும் விசாரிக்க வேண்டியுள்ளதாம். ஜூன் மாத நடுவில் விசாரணை முடிவு பெறக்கூடும்.

'தனி பல்கலைக் கழகம் வேண்டும்'

பஞ்சாப் மொழி பேசுவோர் கோரிக்கை

பாட்டியாலா, மே 29—

சமீபத்தில் நடைபெற்ற அகில இந்திய பஞ்சாப் மொழியினர் மாநாடு எடுத்துள்ள முக்கிய முடிவு; பஞ்சாப் மொழி பேசுபவர்களுக்கு தனிப் பல்கலைக் கழகம் துவக்கப்படவேண்டும் என்பதாகும்.

புதிய மாநில அமைப்புக்கு முன்னர் பெப்சுவில் பஞ்சாபியே அரசாங்க மொழியாக விளங்கி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்வித் துறையில் புதிய மாற்றம்

உத்திரப் பிரதேசத் திட்டம்

நைனிடால், மே 29—

உத்திரப்பிரதேச மாநிலத்தில் தற்போதுள்ள 22 இண்டர்மீடியட் கல்லூரிகளை, பல நோக்குக் கல்லூரிகளாக மாற்றுவதற்கு மாநில கல்வி இலாகா முடிவு செய்துள்ளதாம்.

பல உயர் துறைத் தொழில்கள் பற்றிய கல்வியறிவையூட்டுவதே இதன் நோக்கமாகும்.

பிரிட்டிஷ் படையில் கூர்க்கர்கள்!

மேலும் நீடிப்பதற்குக் காரணம் என்ன?

காட்மண்டு, மே 30—

மலேயா, சிங்கப்பூருக்கு சுதந்திரம் வழங்கிய பிறகும்கூட தற்போது கம்யூனிஸ்டு கலகக்காரர்களை அடக்கிவரும் பிரிட்டிஷ் படையில் கூர்க்கர்கள் நீடித்து இருப்பார்கள் என்று தெரியவருகிறது.

ஆண்டுதோறும் 500 கூர்க்கர்களை பிரிட்டன் தனது இராணுவத்தில் சேர்த்து வருகிறதாம்.

இதனால் நேப்பாள அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 50 இலட்சம் அந்நிய செலவாணி வசதி கிடைக்கிறதாம்.

இதுவரை எந்த நேப்பாள ஆட்சியும் பிரிட்டன் தனது படையில் கூர்க்கர்களைச் சேர்த்துக்கொள்வதைக் கண்டிக்காததற்கு காரணமும் இதுதானாம்.

சளி காய்ச்சலின் எதிரொலி

நகரப் பள்ளிகள் சமீபத்தில் திறக்கப்படமாட்டாதாம்!

சென்னை, மே 29—

சென்னை நகரத்தில் சளிக் காய்ச்சல் (இன்புளுயன்சா) பரவியிருப்பதாலும், மேலும் பரவி வருவதைத் தடுக்கவும், சென்னை நகரத்திலுள்ள பள்ளிகள் அனைத்தும் ஜூன் 17-ந் தேதிக்கு பிறகே திறக்கப்பட வேண்டுமென சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பகல் காட்சிகளுக்குத் தடை

மே 30-ந் தேதி முதல் 15 நாட்களுக்கு சென்னை நகரிலுள்ள திரைப்படக் காட்சிக் கொட்டகைகளில் காலைக் காட்சிகளும், பகல் காட்சிகளும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காட்சிகளின்போது கொட்டகைகளின் கதவுகள், சன்னல்கள் அனைத்தும் மூடப்படுவதால், காற்றின் மூலம் எளிதாக இந்த வியாதி பரவுகிறது என்பதே இந்த நடவடிக்கைக்கு முக்கிய காரணமாகும்.

முதலமைச்சர் தேர்தல் செல்லாதென மனு

சென்னை, மே 29—

சென்னை சட்ட சபைக்கு சாத்தூர் தொகுதியிலிருந்து காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று தேர்தல் குழுவிடம் விருதைவாசி குஞ்சு தேவர் என்பவர் மனுச் செய்துக் கொண்டுள்ளாரெனத் தெரிய வருகிறது.

தொழில் நிர்வாகத்தில் ஊழியருக்கும் பங்கு

புதுடில்லி, மே 29—

'தொழிற்சாலைகளில் தொழிலாளிகள், நிர்வாகத்தில் பங்கு பெற்று முன்னேறச் செய்ய வழிவகுக்கும் ஒரு சட்டத்தை மத்திய அரசாங்கம் கொண்டுவர வேண்டும்; என்று ஐரோப்பா சென்று திரும்பியுள்ள ஆராய்ச்சி குழு ஒன்று சிபாரிசு செய்துள்ளதாம்.

'ஏழைகள் மீது வரிப்பளுவை சுமத்தாதே'

மதுரையில் புது வரி கண்டன நாள்

பொதுக்கூட்டத்தில் சி. பி. சிற்றரசு, எஸ். முத்து முழக்கம்

மதுரை, மே 26—

"ஏழை மக்களாகிய நாங்கள் வரிகளால் கஷ்டப்படுகிறோம்; அந்த வரிக் கொடுமை எங்களுக்குத்தான் தெரியும். குடும்பம்கூட இல்லாது ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கும் காமராசர் போன்றோருக்கு அதன் கொடுமை எப்படித் தெரிய முடியும்? வரிகள் மூலமாக மட்டும்தான் அரசாங்கம் பொருள் திரட்ட முடியுமா? தொழில்களைத் தேசியமயமாக்கினால் அதில் கோடிகோடியாகக் கிடைக்குமே! தொழில்களைத் தேசியமயமாக்கி அதன் மூலம் வரும் வருமானத்தைப் பல துறைகளுக்கும் பயன்படுத்து!

"ஆசைமொழிகள் கூறி வாக்குகளைப் பெற்றுச் சென்ற பிறகு—தேர்தலுக்குப் பிறகு—இவ் வரிகளைப் போட்டது தப்பு!

"சர்க்கார் மக்களை வாழ வைப்பதாக இருக்கவேண்டும். இந்த சர்க்காரோ மக்கள் வாழ்வை ஒழிப்பதாக—வாழ விடாததாக இருக்கிறது.

"பொதுமக்களே! நிச்சயம் நீங்கள் இந்த வரிகளை எதிர்த்துப் போராடித்தான் ஆகவேண்டும் காமராசரும், கிருஷ்ணமாச்சாரியும் எத்தனைச் சிறைச்சாலைகள்தான் கட்டுவார்கள்? சிறைச்சாலைகள் என்ன செய்யும்?"

புது வரிகள் கண்டன நாள் பொதுக்கூட்டம் இன்று மதுரை புட்டுத்தோப்புத் திடலில் மாலை 7 மணியளவில் பொன்னகரம் பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில் நடைபெற்றது; அதுபோது தலைமையேற்ற திரு. எஸ். முத்து அவர்கள் மேற்கண்டவாறு அரசியலாருக்கு அறிவுறுத்தினார்.

மாலை 4 மணியளவில், நகர் மன்றத் தெருவிலிருந்து ஒரு ஊர்வலம் நகர தி. மு. கழகத்தினரால் நடத்தப்பெற்றது; தோழர்கள் எஸ். முத்து, பி. கே. சேதுராமன் முதலியோர் கலந்துகொண்ட இவ்வூர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக, 'புதுவரிகள் போடாதே' என முழங்கிக்கொண்டு புட்டுத்தோப்புத் திடலையடைந்தது.

ஊர்வலம் திடலையடைந்த பின் பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தன் முன்னுரைக்குப் பின், தாளமுத்து அவர்கள் காலமானதற்கு இரங்கற் தீர்மானம் முன்மொழிந்தார்; புதுவரிகள் கண்டனத் தீர்மானத்துடன் மக்கள் தம் இரங்கலைத் தெரிவிக்க இரு நிமிடங்கள் மவுனமாயிருந்து மரியாதை செலுத்தினர்.

அடுத்து, மத்திய வட்டார எம்.ஜி.ஆர். மன்றம், அழகாடி எம்.ஜி.ஆர். மன்றம், அழகாடி வேலாயுதம் நினைவு படிப்பகம், சம்மட்டிபுரம் திரு. வி. க. நினைவு படிப்பகம், அழகாடி-ஒந்தக்கடை வட்டார தி. மு. கழகம், கைவல்யம் நினைவு படிப்பகம், சி. பி. சி. மன்றம், சிறுமி-லில்லி ஆகியோரின் சார்பில் கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவித்து வரவேற்க, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் வரிக் கொடுமைகளை விளக்கி விரிவுரையாற்றினார்.

ஏழுமலை: (மதுரை மாவட்டம்)

26—5—57-ல், தோழர் பா. இராமசாமி தலைமையில் புது வரிகள் கண்டன ஊர்வலமொன்று கண்டன ஒலி முழக்கங்களோடு புறப்பட்டு ஊர் முழுவதும் சுற்றி அண்ணா திடலை வந்தடைந்தது.

புது வரிகளுக்கு எதிராக மக்கள் அணிவகுப்பு

தி. மு. கழகத் தலைமையில் நாடெங்கும் கண்டனம்

தி. மு. கழக தலைமை நிலையத்தின் அறிக்கைக்கிணங்க, தமிழகமெங்கணும், புது வரி விதிப்புக் கண்டன நாள் **26—5—57** அன்று வெகு சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது.

அந்த மகத்தான கண்டன நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

சங்கரநயினர்கோயில்:

26—5—57 மாலை 6-30 மணியளவில் தி. மு. கழகச் சார்பில் புது வரிகளை எதிர்த்து தோழர் சி. எஸ். பழனியப்பன் தலைமையில் கழகப் பணிமனையிலிருந்து ஒரு ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக சென்று சுவாமி சன்னதி அண்ணா திடலில் வந்து முடிவுற்றது. அங்கு நடைபெற்ற கூட்டத்தில் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசியபின், புதிய வரி விதிப்பை எதிர்த்துக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிங்கம்புணரி:

26—5—57 மாலை இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில் புதிய களைக் கண்டித்து ஒரு மாபெரும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் காளாம்பூர் அழகு, இரா. சோது, பெரி. அழகு, கட்டாரி குருசாமி முதலியோர் வரி விதிப்பைக் கண்டித்துப் பேசியபின், ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆலந்தூர்:

26—5—57-ல், ஆலந்தூர் தி. மு. கழகக் கூட்டத்தில் புது வரிகளை எதிர்த்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மண்ணச்சநல்லூர்:

26—5—57 மாலை 6 மணிக்கு, புதிய வரிகள் கண்டன ஊர்வலமும், சிவன் கோயில் மைதானத்தில் தோழர் பு. ரெ. மாரிமுத்து அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் சு. நெடுமாறன் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசினார்; இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கிருஷ்ணபுரம்:

26—5—57 மாலை 7 மணிக்கு; கிருஷ்ணபுரம் தி. மு. கழகச் சார்பில் கருப்புக் கோயில் மைதானத்தில் தோழர். ஆர். பெருமாள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் அரு. ஆதிமூலம் அவர்கள் புதிய வரி விதிப்புகளை கண்டித்துப் பேசிய பின், மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியகுளம்:

26—5—57 மாலை 5 மணிக்கு, கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத்திலிருந்து தோழர் பி. பாண்டியன் தலைமையில் புது வரிகள் கண்டன ஊர்வலம் நகர முக்கிய வீதிகளில் சென்றது. பின்பு கே. வி. கே. சாமியின் நினைவுப் படிப்பகத்தில் தோழர் அ. இளஞ்சேரன் அவர்கள் புதுவரிகள் கண்டனத்தை விளக்கிப் பேசிய பின், இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சலகண்டபுரம்:

26—5—57 மாலை 5 மணிக்கு, சலகண்டபுரம், தோரமங்கலம், சூரப்பள்ளி ஆகிய மூன்று ஊர் தி. மு. கழகங்களின் சார்பிலும் புதிய வரிகள் கண்டன ஊர்வலம் நடைபெற்றது; வண்டி மேட்டினின்றும் கண்டன அட்டைகள், கொடிகள், ஒலி முழக்கங்களுடன் புறப்பட்ட ஊர்வலம் நகரத் தெருக்கள் வழியாக சுற்றிவந்து 6-30 மணிக்கு திரு. வி. க. திடலை அடைந்தது.

புதிய வரி விதிப்புகள் பற்றிய விளக்கத்திற்குப் பின் கண்டனத் தீர்மானம் தோழர் ப. கண்ணன் அவர்களால் முன்மொழியப்பட்டு பொதுமக்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பாலக்கோடு:

26—5—57 மாலை 4-மணிக்கு, புதுவரிகள் கண்டன நாள் ஊர்வலமொன்று தோழர் பி. சி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது; ஊர்வலத்தில் புதிய வரிகளை எதிர்த்து ஒலி முழக்கங்கள் செய்துகொண்டு தோழர்கள் சென்றனர். இறுதியாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சின்னாளபட்டி:

26—5—57-ல், புது வரிகளைக் கண்டித்து தோழர் எஸ். பி. எஸ். இராமையா தலைமையில் ஊர்வலமும், கழகக் கட்டிடத்தின் முன்ட தோழர் கு. செயராம் தலைமையில் கண்டனக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் அ. வீரப்பன், ஏ. எம். டி. நாச்சியப்பன் ஆகியோர் பேசினர். முடிவில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

லாலாபேட்டை:

26—5—57 மாலை 6 மணிக்கு தி. மு. கழகத்தின் சார்பில் புதிய வரி எதிர்ப்பு ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்கள் வழியே சென்று அழகிரி சதுக்கத் சதுக்கத்தை அடைந்தது. அங்கு தோழர் ஆர். குருசாமி தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைப்பெற்றது. புதிய வரிகளை கண்டித்துத் தோழர்கள் சி. மதியன்பன், வை. சிவராஜ், தி. வி. முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேசியபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுவையில் கண்டனக் கூட்டம்

26—5—57 மாலை 7 மணிக்கு புதுவைச் செஞ்சிச்சாலைத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், புதிய வரிகள் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர்கள் கோ. பாண்டியன் செ. கோவிந்தராசன், வழக்கறிஞர் சு. பெருமாள் ஆகியோர் பேசினர்.

தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், புதிய வரிகள் கொண்டுவந்ததன் நோக்கங்களையும், அவற்றால் மக்களுக்கு ஏற்பட இருக்கும் பாதகங்களையும் விளக்கிப் பேசினார்.

புதி வரி விதிப்பைக் கண்டித்தும், நிதி மந்திரி டி. டி. கே. அவர்கள் தம் பதவியை இராஜிணமாச் செய்து, புதிய வரிப் பிரச்சினையின்மீது மீண்டும் தேர்தலுக்கு நிற்குமாறு கேட்டும் இரு தீர்மானங்கள் மக்களின் ஆரவாரக் கைதட்டலுக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

செங்கற்பட்டில் வரி எதிர்ப்பு தினம்

என். எஸ். இளங்கோ, ஆர். எஸ். பாண்டியன் கலந்துகொண்டனர்

பொதுச்செயலாளர் அறிக்கைக்கு இணங்க செங்கற்பட்டு தர்கா திடலில், மத்திய சர்க்காரின் வரி விதிப்பு முறைகளைக் கண்டித்து ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் 26-5-57 மாலை நடைபெற்றது.

தோழர் சி. பி. வேணு அவர்கள் தலைமை தாங்கி வரிக் கொடுமைகளை விளக்கி சொற்பொழிவாற்றினார். தோழர் கோதண்டன் அவர்களும் தூத்துக்குடி நகரச் செயலாளர் ஜோசப் அவர்களும் சிறிது நேரம் பேசியபின், தோழர்கள் மூவை-ஆர். எஸ். பாண்டியன், என். எஸ். இளங்கோ ஆகியவர்கள் புதிய வரித் திட்டங்களை விளக்கியும், ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகவும், மத்தியதர வகுப்பினர் மீண்டும் மீண்டும் வரிக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டும் வருவதைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர். சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குன்றத்தூர்:

26—5—57 மாலை 5 மணிக்கு தோழர் டி. என். சம்பந்தம் தலைமையில் புதுவரிகள் கண்டன ஊர்வலம் கழகப் பணிமனையிலிருந்து புறப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியாக இரவு 7 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தை வந்தடைந்தது. அங்கு, தோழர் பா. ஷாஜான் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; பல தோழர்கள் பேசிய பின் இறுதியாக தோழர் டி. என். சம்பந்தம் பேசினார். பின்னர், புதுவரிகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பண்டிதரின் விதண்டாவாதம்

வரி விதிப்புக்கு நேருவின் சப்பைக்கட்டு!

புதுடில்லி, மே 29—

புது வரி விதிப்புக்கு நாடெங்கும் கண்டனமும். எதிர்ப்பும், ஆர்ப்பாட்டங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தும்கூட, மக்கள் குரலுக்கு செவிசாய்க்க மறுத்து பண்டித நேருவே புது வரி விதிப்புக்கு போலிக் காரணங்களைக்காட்டி, மக்கள் மனமாற்றத்திற்கு முயற்சி செய்துள்ளார்.

புதிதாக விதிக்கப்பட்டுள்ள வரித் திட்டங்களைக் குறைத்துவிட்டால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள சில திட்டங்களைக் கைவிட நேரிடுமாம். அப்படிச் செய்வது மக்களுக்குப் பல புதிய இக்கட்டுகளை உண்டாக்குமாம்!

நாட்டின் உற்பத்தியும் அதனால் பாதிக்கப்படுமாம்!

இப்போது இல்லாத பற்றாக்குறை இனிமேல் ஏற்பட்டு பணத்தின் மதிப்பும் குறைந்துவிடுமாம்!

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்கள் அரங்கில் பேசுகையில்தான் இவ்வாறு பண்டித நேரு புதிய வரி விதிப்புகளுக்குக் காரணங்களை கண்டுபிடித்து ஆதரவு தேடியுள்ளார்.

கேரளத்தில் புது வரிகள் கண்டன ஊர்வலம்

உணர்ச்சிமிக்க மலையாள ஒலி முழக்கங்களுடன் கழகத் தோழர்கள் பவனி

திருவனந்தபுரம், மே 26—

தலைமைக் கழகத்தின் கட்டளைப்படி மத்திய சர்க்காரின் புது வரிகளைக் கண்டித்து, திருவனந்தபுரம், கிளைக் கழகம் இன்று காலை மாபெரும் சைக்கிள் ஊர்வலம் ஒன்று நடத்தியது.

ஊர்வலம் வள்ளக்கடவிலிருந்து காலை 10 மணிக்கு ஆரம்பமாகியது.

தோழர் கே. எச். எம். ஜுபேர் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிச் சென்றார்.

ஊர்வலம், பழவங்காடி வழியாக சர்க்கார் காரியாலயம், கவர்னர் மாளிகை, விஜயமோகினி மில் முதலிய இடங்களில் முழக்கங்களை ஒலித்துச் சென்றது.

'கேந்திர பட்ஜெட் கேரளத்தினு ஆபத்து', 'கேந்திரபாணம் நமுக்கு வேண்டா', 'கேரள நாடு திராவிட நாடு', 'திராவிட நாடு திராவிடருக்கே', 'டி.டி.கே. பத்ததி பட்டிணி பத்ததி', 'வடக்கன் மேதாவித்தம் அவசானிப்பிக்கும்'—ஆகிய மலையாள முழக்கங்களை கழகத் தோழர்கள் ஊர்வலத்தில் முழக்கினர்.

மக்களின் கவனத்தை இவ்வூர்வலம் மிகவாகக் கவர்ந்தது.

ஊர்வலம் மாலை 3 மணிக்கு கழக அலுவலகம் வந்து சேர்ந்தது.

தோழர் கே. எச். எம். ஜுபேரின் மலையாள சொற்பொழிவுடன் மக்கள் கலைந்தனர். (ந. நி.)

அரைவயிறு உண்டால் போதும்?

கல்கத்தா, மே 29—

இந்தியாவில் சாதாரணமான ஒருவன் உட்கொள்ளும் உணவில் 3-ல் 2 பங்குதான், ஜப்பானில் கடுமையாக உழைப்பவன் உட்கொள்ளுகிறானும்!

'எனவே, நாட்டில் நிலவி வரும் உணவு நெருக்கடியை சமாளிக்க உணவு உபயோகத்தை மக்கள் குறைத்துக் கொள்ள வேண்டும்' என்று வங்க முதலமைச்சர் டாக்டர் ராய் கோரியுள்ளார்.

பீகாரில் 15,870 பேர் அபினி உபயோகிக்கிறார்களாம்!

பாட்னா, மே 29—

பீகார் மாநிலத்தில் அபினி உபயோகிப்பவர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டுமாம்.

அவ்வாறு அனுமதி பெற்று அபினி உபயோகிப்பவர்கள் 15,870 பேர் என்று சுங்க இலாகா அமைச்சர் போலா பாஸ்வான் பீகார் சட்ட சபைமேல் சபைகளில் தெரிவித்துள்ளார்.

பொதுச்செயலாளர் பேச்சு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

6 காசுகளாக்கி—ஒரு அணாவாக்கி யிருக்கிறார்.

"வெள்ளையன் காலத்தில் அஞ்சல் கார்டு 1½ அணா; இவர்கள் வந்த பிறகு 2 அணா! புதிய காசுகள் வந்த பிறகு 13 காசுகள்!

"வெள்ளைக்காரன் காலத்தில் பணம் அனுப்ப (மணியார்டர்) கட்டணம் ரூ. 10-க்கு 2 அணா; ரூ. 20-க்கு 4 அணா; ரூ. 30-க்கு 6 அணா. இந்தக் 'காருண்ய' மிகுந்தவர்கள் ஆட்சிபீடமேறிய பிறகு ரூ. 5-க்கு 2 அணா; ரூ. 10 வரை 3 அணா; ரூ. 15 வரை 4 அணா; ரூ. 25 வரை 6 அணா.

"வெள்ளைக்காரன் காலத்தில் 'பதிவுத் தபால்' கட்டணம் 5½ அணா—6 அணா. இந்தக் 'காருண்ய' மிகுந்தவர் காலத்தில் 11 அணா.

"வெள்ளைக்காரன் காலத்தில் 'நூல் அஞ்சல்' அஞ்சல் அட்டையின் விலைதான்; இவர்கள் வந்த பிறகு ஒரு அணா!

"இன்னும் எல்லா இன்றியமையாதப் பொருள்கள் அத்தனைமீதும் வரி போட்டிருக்கின்றார்கள்!

'கோவணம்' கட்டினான் வெள்ளைக்காரன்!

"வெள்ளைக்காரன் காலத்தில்—1936-37 என்று கருதுகிறேன்—அப்பொழுதுதான் நெருப்புப் பெட்டிக்கு வரி போட்டார்கள்; அதற்கு முன் நெருப்புப் பெட்டிக்கு வரி இல்லை. வரி போட்டவுடன் காலஞ் சென்ற சத்திய மூர்த்தி கூறிய சொற்கள் இன்னும் என்னுடைய செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

"அப்பொழுது அவர் சொன்னார்—'நெருப்புப் பெட்டிக்குக்கூட கோவணம் கட்டுகிறானப்பா வெள்ளைக்காரன்'—என்று!

அவிழ்த்துவிட்டார்களா காருண்யமிக்கவர்கள்?

"ஆனால் இந்த 'காருண்ய' மிக்கவர்கள் வந்த பிறகு அந்த கோவணத்தை அவிழ்த்து விட்டிருக்கலாமல்லவா? அவிழ்க்க வில்லை. அவன் கட்டிவிட்டிருக்கும் அளவாவது விட்டிருக்கலாமல்லவா? அதுவுமில்லை. இறுக்கிக் கட்டிவிட்டிருக்கிறார்கள்.

ஏழை மக்களே, எண்ணிப் பாருங்கள்

"வெள்ளையன், 144 நெருப்புப் பெட்டிகளுக்கு போட்ட வரி 8 அணா; இந்த 'காருண்ய'மிக்கவர்கள் வந்த பிறகு ரூ. 2-தான் போட்டார்கள். அதுவும் இப்பொழுது ½ அணா பெட்டி முக்காலணா! அதைப்போலவே சர்க்கரையும்! 10-ஆண்டுகளுக்குமுன் இருந்த சர்க்கரைவிலையையும், இப்பொழுதுள்ள விலையையும் நீங்கள் எண்ணிப் பார்த்தால் வரிகள் எவ்வளவு ஏறியிருக்கிறதென்று அறியலாம். அதேபோல புகையிலை வரியும்!

பணக்காரர்களையா இந்த வரி பாதிக்கும்?

"இந்த வரிகள் ஏழை எளியவர்களைப் பாதிக்காது — பணக்காரர்களைத்தான் பாதிக்கும் என்று சொல்லுகிறார்கள். எப்படிப் பணக்காரர்களை இந்த வரிகள் பாதிக்கும்? இந்த வரிகள் ஏழை எளியவர்களின் தலையில்தான் கடைசியில் வந்து விழுமே தவிர, பணக்காரர்களை - முதலாளிகளை - உற்பத்தியாளர்களை - விளம்பரம்செய்பவர்களை ஒருபோதும் பாதிக்காது! உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன்; இந்த ஒலி பெருக்கியின் விலை ரூ. 2,500 என்று வைத்துக்கொள்ளுங்கள். இதற்கு ரூ. 250 வரி போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இந்த ரூ. 250, இதை உற்பத்தியாக்கும் முதலாளியையா பாதிக்கும்? ரூ. 2,500-யும் போட்டு, வரி ரூ. 250-யும் போட்டு இதனுடைய விலை ரூ. 2,750 என்று அவன் விற்பானே தவிர, வரி அவனையா பாதிக்கும்? நெருப்புப் பெட்டி முக்காலணா; அதற்கு காலணா வரி போட்டார்கள். அவன் இரண்டையும் சேர்த்து மக்களிடம் 1 அணா என்று வாங்குகிறான் என்றால், அது எந்த முதலாளியை பாதிக்கிறது?

"ஏற்கெனவே ஒரு ரூபாய் கூலி வாங்கியவனுக்கு இப்பொழுதும் கூலி ரூ. 1-தான்; ஆனால், முன்பு அவன் குடித்த டீ ஒரு அணா—இப்பொழுது ஒன்றேகாலணா! முன்பு நெருப்புப் பெட்டி அரையணா - இப்பொழுது முக்காலணா! முன்பு சாப்பி இரண்டணா— இப்பொழுது இரண்டரையணா! யாரை பாதிக்கின்றது வரி? முதலாளியையா பாதிக்கின்றது?"

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

வில்வாரணிக்கு அண்ணா வருகை

★

வடஆற்காடு மாவட்டம்—வில்வாரணி பழைய மாணவர் ஆண்டுவிழா 12—6—57 அன்று மாலை வில்வாரணியில் நடைபெறும். அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

அன்று ஊராண்மைக் கழகச் சார்பில் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப் படும்.

திருமணங்கள்

★

2—6—57 காலை 8 மணிக்கு மு. நாகப்பன் — க. மரகதம், க. கனகசபை—ச. சாமந்தி ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த விழா மதுராந்தக வட்ட குணபேடு கிராமத்தில், கதிர்வேல் அவர்கள் இல்லத்தில் போள். கு. கோதண்டபாணி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. எஸ். எஸ். தென்னரசு, ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

2—6—57 காலை 8 மணிக்கு பாரணசிங்குபாளையம்- கேசவக்கவுண்டர் இல்லத்தில், தோழர் இராமகிருஷ்ணன் — தோழியர் சரோஜினி, தோழர் உலகநாதன் —தோழியர் உமாதேவி ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி - கல்யாணசுந்தரம், பி. கணேசன், ஏ. அநந்தகிரி முதலியோர் வாழ்த்துரை வழங்குவர்.

கழகக் கூட்டங்கள்

★

தென்காசி:

லஜபதி மைதானத்தில் 1—6—57 அன்று

பேசுவோர்:

க. அன்பழகன் எம். எல். ஏ.
எஸ். அமீது

★

சேலம்-அம்மாப்பேட்டை:

23-வதுவட்ட செல்வம் சதுக்கம் 2—6—57 மாலை 6-30 மணிக்கு தி. மு. கழகத் திறப்பு விழா

தலைவர்: ஆர். வி. வரதராசு

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ
எம்.பி.சுப்பிரமணியம்எம்.எல்.ஏ.
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.

(காலை 8-30 மணிக்கு ஊர்வலமும்—கொடியேற்று விழாவும் நடைபெறும்.)

★

பாரைப்பட்டி:

(பழனி வட்டம்)

பொதுச்சாவடி மைதானம் 2—6—57 மாலை 6 மணிக்கு தி. மு. கழகத் துவக்க விழா

தலைவர்: ஆறுமுகம்

கொடியேற்றுபவர்: கே. பழனிசாமி

பேசுவோர்:

மு. வசனப்பித்தன்
பி. என். இராமானுசம்
சு. முத்துக்குமார்
கே. குமரவேல்
சி. பிச்சைமுத்து
எஸ். எம். துரைசாமி

★

மேவுந்தர்பேடு:

2—6—57 அன்று தி. மு. கழகத் துவக்க விழா

தலைவர்: எம். ஆர். சந்திரன்

பேசுவோர்:

கண்ணதாசன்
வி. எஸ். கோவிந்தராசன்

★

நாயர் கிராமம்:

1—6—57 அன்று தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: ஷாகுல் அமீது

பேசுவோர்:

என். வி. நடராசன்
வி. எஸ். கோவிந்தராசன்
பால்வண்ணன்

★

இராசகோபாலபுரம்:

(தஞ்சை மாவட்டம்)

2—6—57 மாலை 6 மணிக்கு தி. மு. கழகத் துவக்கவிழா

பேசுவோர்:

என். வி. நடராசன்
பி. எஸ். பி. சாமி
இர. கணேசன்

மு. கருணாநிதி உடல் நிலை

தோழர் கருணாநிதி அவர்கள் விஷசுரத்தினால் பிடிக்கப்பட்டுள்ளார். மருத்துவர், ஓய்வாக இருக்கும்படி வற்புறுத்தியுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக் கூட்டம்

2—6—57 காலை 9-மணிக்கு
சென்னை கோகலே மன்றத்தில்

தலைவர்: **எஸ். நாராயணன்** M. A.

பேச்சாளர்கள்;

இரா. நெடுஞ்செழியன்

மு. கருணாநிதி

நன்கொடை: ரூ. 1; அணா 8.

—தி. மு. க. மாணவர் கிளை

குறிப்பு:—'அறிவகம்'த்தில் நன்கொடை டிக்கெட்டுகள் கிடைக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வள்ளுவர் ஆண்டு 1989 வைகாசித் திங்கள் 20-ம்நாள் (2—6—57) ஞாயிறன்று காலை 9-மணி அளவில் பொருள்வைத்தசேரியில், எனது செல்வன் செயராமனுக்கும், நாகை திரு. ச. இராமையா அவர்கள் செல்வி சரோசாவுக்கும் திரு. ஜோதி எஸ். இராமலிங்கனுர் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தவிழா நடைபெறும்.

அதுசமயம் அண்ணா அவர்களும், திரு. ப. உ. சண்முகம் (திருவண்ணாமலை எம்.எல்.ஏ.,) திரு. சி. வி. இராசகோபால் (காஞ்சிபுரம்) ஆகியோரும் வாழ்த்துரை வழங்குவார்கள்.

அனைவரும் வருக!

பொருள்வைத்தசேரி } இராம. சீனிவாசன், முத்துலெட்சுமி சீனிவாசன்

சிவகாசியில் புதுவரிகள் கண்டன ஊர்வலம்—பொதுக் கூட்டம்

2—6—57 அன்று மாலை சிவகாசி அம்மன் கோவில்பட்டி தி. மு. கழக இல்லத்திலிருந்து, புதுவரிகள் கண்டன ஊர்வலம் புறப்பட்டு நான்குரதவீதி வழியாக மாரியம்மன் கோவில் முன்பு வந்து சேரும். அங்கு இரவு 7-30 மணிக்கு தோழர் ந. கா. குருசாமி தலைமையில், தோழர்கள் சே. ஆர். பி. மணிமொழியன், கா. கார்மேகம் மற்றும் பலர் பேசுவர்.

சென்னை — சேப்பாக்கம் சாமி படிப்பகம்

2—6—57 மாலை 6 மணிக்கு, என்-27, லாக்நகர், சேப்பாக்கம் 40-வது வட்டம் சாமி படிப்பக பணிமனையில் சொற்பயிற்சிக் கூட்டத்துவக்க விழாவை பன்மொழிப் புலவர் - கா. அப்பாதுரையார் அவர்கள் துவக்கிவைப்பார். அதுபோது, 'குறளும் நாமும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை-நுங்கம்பாக்கம் இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

1—6—57 இரவு 9 மணிக்கு மேற்படி மன்ற செயற்குழுக் கூட்டம் தோழர் தி. சு. கிள்ளிவளவன் தலைமையில் நடைபெறும்; அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

புது வரிகள் கண்டன ஊர்வலம்

2—6—57 மாலை 5 மணிக்கு குளித்தலை பெரியபாக்கத்திலிருந்து புதுவரிகள் கண்டன ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக மாலை 6 மணிக்கு வ. உ. சி. சதுக்கத்தில் வந்தடையும்.

ஆர்.எம்.எஸ். ஊழியர் சங்க சென்னை வட்டார மாநாடு

அண்ணா கலந்துகொள்வார்

★

2—6—57 அன்று, அகில இந்திய ஆர். எம். எஸ். ஊழியர் சங்க 3-வது பிரிவு சென்னை வட்டார மாநாடு தஞ்சை திலகர் திடலில் தோழர் வி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெறும்; தோழர் ஏ. பி. துளசிராம் அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைப்பார்.

அன்று அவர்களும், மற்றும் தோழர்கள் அகிலன், பாண்டியன், கிருட்டிணசாமிகோபாலர் எம்.எல்.ஏ., தொழில் அதிகாரி தம்பையா ஆகியோர் கலந்து கொள்வர்.

க. அறிவழகன் நிகழ்ச்சிகள்

ஜூன்

2: காலை 8 மணி: கீரக்களூர்
,, 10 ,, மஞ்நாடி
மாலை 6 ,, தடாரங் கோட்டை
3: அதிராம்பட்டினம்
4: இராமநாதபுரம்
5: முடவன்குளம் (திருநெல்வேலி)
7: அதங்குடி
8: சங்கராபுரம்
9: சென்னை

குளித்தலையில் தி. மா. மு. கழகத் துவக்க விழா

2—6—57 மாலை 6 மணிக்கு குளித்தலை—வ. உ. சி. சதுக்கத்தில், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா தோழர் ஆ. பெ. கிருட்டிணன் தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், தி. வீ. முத்துகிருட்டிணன், க. முத்து ஆகியோர் பேசுவர்.

வேலூர்-கொசப்பேட்டை தி. மு. கழக தோழர்கட்கு:

2—6—57 காலை 9-30 மணி அளவில், வேலூர் — கொசப்பேட்டை 26-வது வட்டத் தி. மு. கழகத் துவக்க விழா அமைப்புக் கூட்டம் புதுவை கோவிந்தராசன் தலைமையில் பங்களா வீதியில் நடைபெறும்.

புதுவரிகள் கண்டனநாள் பொதுக்கூட்டம்

2—6—57 மாலை காரைக்கால்—முருகைய நாடார் திடலில் தோழர் பொ. செல்வம் தலைமையில் புது வரிகள் கண்டன நாள் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், புதுவை-சு. பெருமாள், சி. ஜம்பு, தி. கணபதி, ப. ஆ. கரீம், சின்னப்பா, ந. இராமசாமி ஆகியோர் பேசுவர். மாலை 4 மணிக்கு, அரசலார் மதகடியிலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

2—6—57 மாலை 6-30 மணிக்கு சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக 'அண்ணா சொல்லவை' சார்பில் தோழர் ஆதிகேசவன் தலைமையில் 'நான் விரும்பும் எழுத்தாளர்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

2—6—57 மாலை 6 மணிக்கு சென்னை 12-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சி. தருமலிங்கம் தலைமையில், 'வீரம்' எனும் தலைப்பில் தோழர்கள் இராசகோபால், எம். ஆறுமுகம், தன்ராஜ், பாலையம், இராமசாமி, மு. சு. மணி, தமிழழகன் ஆகியோர் பேசுவோர்.

திருவள்ளுவர் நினைவு நாள்

2—6—57 காலை 10 மணிக்கு, சேலம்—குகை, இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் சமரச சன்மார்க்க சபையில், திரு. டாக்டர் இரா. பி. சேது (பிள்ளை) தலைமையில் நடைபெறும்; அதுபோது 'பொய்மையும் வாய்மை யாகுமா?' என்ற விவாதத்தில் பலர் கலந்து கொள்வர். மாலை 6 மணிக்கு தோழர் இரா. சிந்தாமணி அவர்கள் சிறப்புரையாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.